


# கலைஞானச்சுடர் 2014

## விருது

## பண்பாட்டுப் பெருவிழா 22.01.2015

நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை

# கலைஞானச்சுடர்

# 2014

## நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை நடாத்தும்
## பண்பாட்டுப் பெருவிழா

22.01.2015

# கலாசாரப் பேரவைக் கீதம்

நல்லூர்ப் பிரதேசக் கலாசாரப் பேரவையை
நல்லெழிற் கலைஞரால் நலமுறப் பேணுவம்!
கவின்கலை மிளிர்ந்திட, கற்பனை கனிந்திட,
புவிமிசை நிதமிவை புதியதாய்ப் பொலிந்திட,
கலைஞான மோங்கக் களம் அமைப்போம்!
கலைஞரைப் போற்றிக் கௌரவம் செய்வோம்!
(நல்லூர்ப் பிரதேச)

இயலிசை நாடகமும் இதமிகு நாட்டியமும்
பயனுறு சுவடியும் புதைபொருள் ஆய்வும்
விந்தைமிகு சித்திரமும் விதந்தரு சிற்பங்களும்
சிந்தையில் தெளிவுறச் சேர்ந்தே உழைப்போம்!
அணிதிரள்வோம்! எங்கள் கலை வளர்க்க!
பணிபுரிவோம்! எங்கள் இனம் சிறக்க!
(நல்லூர்ப் பிரதேச)

அற்புதக் கலைஞரும் அன்புயர் ரசிகரும்
ஒற்றுமை ஓங்கிட ஓரணி நிற்போம்!
நற்றமிழ்க் கலைகளை நம்முயர் பண்பினை
வற்றாது போற்றியே வளம்பெற வைப்போம்!!
எம்முயிராம் எங்கள் கலைகள் என்போம்!
நம் மனமகிழ சுவையென நாம் படைப்போம்!
(நல்லூர்ப் பிரதேச)

ஆக்கம்
அமரர் கலைஞானச் சுடர்
**தா.தேவமதுரம் அவர்கள்.**

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதகண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந்தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

பேராசிரியர் "மனோன்மணீயம்"
**பெ. சுந்தரம்பிள்ளை**



# வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் கலைஞர் களின்விபரத்திரட்டான"கலைஞானச்சுடர்"எனும்நூலுக்குவாழ்த்துரைவழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பாரம்பரிய மரபு களையும் பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட இப்பிரதேசத்தின் கலாசார பேரவை யினால் வாய்ப்பாட்டு, நடனம், சமய இலக்கியம், இசை, நாடகம், நாட்டுக் கூத்து, பண்பாட்டியல், தவில், சிற்பம், ஓவியம், பாரம்பரியக்கலை போன்ற துறை சார்ந்த கலைஞர்களின் விபரத்திரட்டாக இந்நூல் வெளியிடப்படுவது சிறப்பான தாகும். ஒவ்வொரு பிரதேசமும் தமது பண்பாட்டு விழுமியங்களை நூல் வடிவிலே ஆவணப்படுத்த வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பாகும். நல்லூர்ப் பிரதேசமானது வரலாற்று முக்கியத்துவத்தினைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதோடு பிரசித்தி பெற்ற பாரம்பரியக் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பிரதேசமாகும்.

காலத்தின் தேவையறிந்து வெளியிடப்படும் ஆவணமான "கலைஞர் விபரத்திரட்டு" நூல் வெளியீட்டிற்கு உறுதுணையாகவிருக்கும் பிரதேச செயலாளர் திரு. பா. செந்தில்நந்தனன், கலாசாரப் பேரவையினர், கலாசார உத்தியோகத்தர், மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இம்மலர் வெளியீடு சிறப்புற அமைய எல்லாம் வல்ல நல்லூர் முருகப்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



# நல்லூர்ப் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார விழா 2014இல் வெகு கோலாகலமாக நடைபெறுவதை எண்ணி மிகமகிழ்ச்சியடைகின்றேன். நல்லூர்ப் பிரதேசம், பல்வேறு சமயப் பெரியார்களும் பண்பாட்டுக் கலைஞர்களும் செறிந்து வாழ்கின்ற சீர்மிகு பிரதேசமாகும்.

நல்லூர் என்று கூறினாலே உலகெங்கும் வாழும் மக்களின் மனக்கண்முன் தெரிவது அருட்கடாட்சம் நிறைந்த நல்லூர் முருகனும், அவன் எழுந்தருளியிருக்கும் கோவிலுமாகும். இயல், இசை, நாடகமாகிய முத்துறைகளையும் மேலோங்க வளர்த்து வரும் கலைஞர்களை அதிகமாகக் கொண்ட நல்லூரிலே, பலரும் கலைக்கூடங்களை அமைத்துக் கலாசார விழுமியங்களைப் பேணி வளர்த்து வருகின்றார்கள். அந்த வகையிலே நல்லூர் கலாசாரப் பேரவை பல்துறைக் கலைகளை மேம்படுத்தவும், கலைஞர்களை ஊக்கப்படுத்தவும் கலாசார விழாக்கள் மற்றும் போட்டிகள் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது. இதற்குப் பிரதேசத்தில் உள்ள கலை ஆர்வலர்களின் பங்களிப்பு மெச்சத்தக்கதாகவுள்ளது.

கலாசார விழாக்களில், பல்வேறு துறைகளில் கால் பதித்து கல்விக்கும் கலைக்கும் சேவை செய்த கலைஞர்களைக் கௌரவித்து "கலைஞானச்சுடர்" என்ற விருது வழங்கப்பட்டு வருகின்றது. இது வாழ்கின்ற மூத்த கலைஞர்களும், கலாசாரப் பேரவையையும் பெருமையடைய வழிசமைக்கின்றது.

எனவே 2014ம் ஆண்டு நடைபெறுகின்ற கலாசார விழாவும் கலைஞர் கௌரவிப்பும் சிறப்புற வாழ்த்துவதுடன், இம்மலர் வெளிவருவதற்குப் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது அகமகிழ்ந்த பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"கலையின்பமே நிலையின்பமாம்"

**பா. செந்தில்நந்தனன்**
பிரதேச செயலர்
நல்லூர்.

## வாழ்த்துச் செய்தி



நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவையானது பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கப்படும் கலைஞர் தொடர்பான விபரங்களை தொகுத்து வெளியிடுகின்ற சிறப்பு வெளியீட்டுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தகு முயற்சிகள் வருங்காலத்தில் கலைவரலாறு மற்றும் பிரதேச பண்பாட்டம்சங்களை தொகுத்து ஆவணமாக்க முயல்பவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் உரிய தகவல்களை வழங்கவல்லதாக காணப்படுவதால் பண்பாட்டு மேம்பாடுசார் அனைத்து முயற்சிகளையும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் வாழ்த்தி வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திருமதி உஷா சுபலிங்கம்**
பிரதிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.



23.09.1935

## கலைஞானச்சுடர்-2014

# திருமதி ஞானமணி செல்லையா

528, பலாலி வீதி, திருநெல்வேலி

**நடனம்**

யாழ். மாவட்டத்தின் மூத்த நடனக் கலைஞரான திருமதி.ஞானமணி செல்லையா அவர்கள் திருநெல்வேலியைத் தனது சொந்த ஊராகக் கொண்டவர். இவர் சிறு வயது முதல் நடனத்தில் ஆர்வம் கொண்டு கொழும்பில் "நாச்சியாறா ஸ்கூல் ஒவ் டான்ஸ்" நிறுவனத்தில் பிரபல இந்திய நாட்டிய ஆசான் தஞ்சாவூர் கோவிந்தராஜபிள்ளையிடம் நடனம் பயின்றார். பின்பு, பிரபல நாட்டிய மேதைகளாகிய திருமதி ருக்மணிதேவி அருண்டேல் மற்றும் அடையாறு திரு.லக்சுமணனிடம் நட்டுவாங்கம் கற்று நாட்டியக்கலையில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற கலைஞராகத் திகழ்ந்தார். யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியராகச் சேவையாற்றிய இவர், திருமணமாகிய பின்பு 27.03.1963 ஆம் ஆண்டிலிருந்து சொந்தமாக "பாரதி கலாமன்றம்" எனும் பெயரில் திருநெல்வேலியில் நடனப் பள்ளியை ஆரம்பித்து பல நடன கலைஞர்களை உருவாக்கியதுடன் பல மாணவிகளை 1995 ஆம் ஆண்டுவரை அரங்கேற்றியுள்ளார். ஒவ்வொரு நடன அரங்கேற்றமும் அக்காலத்தில் பெரும்வரவேற்பைப் பெற்றது. அதில் "திருமயிலைக் குறவஞ்சி" என்னும் நாட்டிய நாடகம் அப்போது யாழப்பாணத்திலிருந்த அரச அதிபர் திரு.வேணன் அபயசேகர முன்னிலையில் அரங்கேறிப் பெரும் புகழ் பெற்றது. இந்த நாட்டிய நாடகம் இலங்கையில் மலைநாட்டில் பலபாகங்களிலும் கோயில் நிதிக்காக மேடையேற்றப்பட்டது.

பெற்ற விருதுகள்: கலாசேத்திர டிப்ளோமா பரதநாட்டியம், பரதசூடாமணி டிப்ளோமா நட்டுவாங்கம், "கலா ரத்னா" விருது -இலங்கை அரச கலை கழகத்தால் பரதநாட்டியத்திற்கு அளித்த பங்களிப்புக்கு 1998 டிசம்பர் மாதம் அரச சமய, கலாசார அமைச்சரால் வழங்கப்பெற்றது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.



25.12.1938

## கலைஞானச்சுடர்-2014

# சைவப் புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை

153, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்

### சமயம்

வேலணையில் பிறந்து, கொக்குவில் பதியில் வசித்து வரும் சைவப் புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள், ஓய்வுநிலை தரம் 1 அதிபர் ஆவார். சைவப் புலவர், சித்தாந்தபண்டிதர் அகிய தகைமைகளைப் பெற்ற இவர், இந்துசமயத்துறைக்குப் பெரும்பணியாற்றிவருகின்றார். சைவப்புலவர் சங்கம், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆகியவற்றின் நிர்வாகசபை உறுப்பினராக, செயலாளராக, தலைவராக இருந்து பல சமயப்பணிகளைச் செய்துள்ளார். மேலும் அகில இலங்கைத் திருமுறை மன்றம், திருவாவடுதுறை சித்தாந்தப் பயிற்சிமையம் ஆகியவற்றின் போதனாசிரியராகவும், சிவதொண்டன் நிலையம் போதனாசிரியராகவும், அகில இலங்கைத் திருமறை மன்ற உறுப்பினராகவும் இருந்து சமயப் பணியாற்றியுள்ளார்.

ஆலயப் பணிகளினூடாகவும் இந்துசமய வளர்ச்சிக்குச் சேவைபுரிந்துள்ளார். வேலணை முடிப்பிள்ளையார் ஆலயம், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மற்றும் கொக்குவில் மஞ்சவனப்பதி தேவஸ்தானம் ஆகியவற்றின் உறுப்பினராகவிருந்து மலராசிரியராக, சமய ஆலோசகராக பல ஆக்கப் பணிகளை செய்து வந்துள்ளார். நல்லை திருஞானசம்பந்த ஆதீன நம்பிக்கைச் சபை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நம்பிக்கைச்சபை ஆகியவற்றின் உறுப்பினராகவிருந்து, பணியாற்றி வருகின்றார். 20 வருடங்களுக்கு மேலாகச் சமயப் பணியாற்றி வருகின்ற இவர், தற்பொழுது அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவராக இருக்கின்றார்.

**பெற்ற விருதுகள்:** சித்தாந்தசிரோமணி - மெய்கண்டார் ஆதினம் வழங்கியது. ஆசிரியதிலகம் - சர்வதேச இந்துமத குருபீடம் வழங்கியது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 -நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.



15.08.1941

## கலைஞானச்சுடர்-2014

# திரு.நாராயணபிள்ளை இராமசேது

செங்குந்தா வீதி, திருநெல்வேலி

**சிற்பம்**

திரு. நா. இராமசேது அவர்கள் திருநெல்வேலியைத் தனது சொந்த ஊராகக் கொண்டவர். தனது தாய்மாமன் மற்றும் மாமனாரிடமிருந்து சிற்பக் கலையினைக் கற்றுள்ள இவர், 1961 ஆம் ஆண்டிலிருந்து தனது கலைப்பயணத்தை ஆரம்பித்து இற்றைவரை அதில் அதிக ஈடுபாட்டுடன் பணிபுரிந்து வருகின்றார்.

பதினாறுக்கும் மேற்பட்ட சிற்பக் கட்டடங்களை உருவாக்கியுள்ளார். அவற்றில் சில: 1961 ஆம் ஆண்டு பருத்தித்துறை சிவன் கோவில், 1962 ஆம் ஆண்டு திருகோணமலை பனிச்சங்குளம் விநாயகர் கோயில் மூலஸ்தானம், 1965 மட்டக்களப்பு பாண்டிருப்பு அம்மன் கோயில், 1962 முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோயில், 1972 அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோயில், 1975 இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் என்பன. மேலும் 1996 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் அமைக்கப்பட்டுள்ள 6 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை, ஔவையார், சோமசுந்தரப்புலவர், மகாத்மாகாந்தி போன்ற பெரியார்களின் உருவச்சிலைகள் என்பனவும் போதனாவைத்தியசாலையில் அமைக்கப்பட்ட "தாய்சேய்" சிலை ஆகியனவும் இவரால் உருவாக்கப்பட்டன. கும்பாபிஷேகக் கிரியைகளில் ஒன்றான அஷ்டபந்தன மருந்து சாத்தி தெய்வ சிற்பத்தை ஸ்தாபிக்கிறது போன்ற தெய்வ கைங்கரியங்களிலிலும் ஈடுபாடு கொண்டவர்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.



14.06.1943

# கலைஞானச்சுடர்-2014

## திரு. சரவணமுத்து துரைவீரசிங்கம்

154/31 ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்

**ஓவியம்**

சிற்பம், ஓவியம் ஆகிய துறைகளில் ஆற்றல்மிக்கவரான இவர், அரச நுண் கலைக் கல்லூரியிலும் பலாலி ஆசிரிய பயற்சிக் கலாசாலையிலும் விசேட பயிற்சி பெற்று சித்திரபாட ஆசிரியராக 28 வருடங்களும், துறைசார்ந்த ஆலோசகராக ஐந்து வருடங்களும் பணியாற்றியுள்ளார். கோண்டாவில் பதியில் பிறந்து கந்தர்மடத்தில் நிரந்தரமாக வசிக் கின்றார். இந்தியச் சிற்பியான M.N.மணி அவர்களிடம் ஏழு வருடங்கள் சிற்ப நுட்பங்களையும், பித்தளை வார்ப்பு முறைகளையும் பயின்றுள்ளார். இவரால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள் சில:- கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி (1973), திருகோணமலை அன்னை வேளாங்கன்னி மாதா (12 அடி உயரம்), கொழும்பு சென். பீற்றர் சிற்பம், புன்னாலைக்கட்டுவன் கணேச ஐயரின் சிற்பம், கோப்பாய் ம.வி. முன்றலில் ஆறுமுகநாவ லர் சிற்பம் ஆகியன. 1970ல் சித்திர ஆசிரியராகச் சேர்ந்தார். சித்திரப் பயிற்சி நிறுவனம் ஒன்றைத் தனது இல்லத்தில் அமைத்துப் பல சித்திர மாணவர்களை உருவாக்கி வருகின்றார்.

### பெற்ற விருதுகள்

2006 ஆம் ஆண்டு அரச விருதான கலாபூஷண விருது வழங்கப்பட்டது. கைலாசநாதக் குருக்களினால் "சிற்ப ஓவியக் கலைமாணி" விருது வழங்கப்பட்டது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.



22.03.1946

## கலைஞானச்சுடர்-2014

# திருமதி நாகம்மா மகாலிங்கம்

41, முருகன் வீதி, திருநெல்வேலி

**வாய்ப்பாட்டு (கர்நாடக இசை)**

வட- இலங்கை சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டம் பெற்றவரும் பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியருமாகிய திருமதி நா.மகாலிங்கம் அவர்கள் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டவர். சிறுவயதிலிருந்தே இவரிடம் காணப்பட்ட இசையார்வம் காரணமாக முதலில் மீசாலை குமாரசாமி ஆசிரியரிடமும் பின்பு பாடசாலைக் காலத்தில் வரணி ம.வி. ஆசிரியர் திரு.சி.கார்த்திகேசு அவர்களிடமும் சங்கீதம் கற்றார். பின்னர் யாழ் ரசிக ரஞ்சன சபாவில் கடமை புரிந்த பொன் சுந்தரலிங்கம் அவர்களிடம் வ. இ. ச. சபையின் தரம் 6 வரை சங்கீதம் கற்றுக்கொண்டார்.

1977ல் இசையாசிரியராக நியமனம் பெற்றார். 30 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றிப் பல மாணவிகளை உருவாக்கிய இவர், பல மேடைக் கச்சேரிகளை விழாக்களில் 1980-1986வரை செய்துள்ளார். வானொலி "பி" தரம் கலைஞராக திகழ்ந்தார். திருமுறைப்பாடல், பக்தரஞ்சனி போன்ற இசை நிகழ்வுகளையும் நிகழ்த்தியுள்ளார். பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்ற காலத்திலிருந்து இளம் கலைஞர் மன்றத்தின் இசையாசிரியராகவிருந்து இன்று வரை கற்பித்துக் கொண்டுவருகின்றார். பல இசைநாடகங்களிலும் தனது ஆற்றுகையை வெளிப்படுத்திய ஒரு சிறந்த கலைஞராவர். இவரது குடும்பம் கலைக்குடும்பம் என சொல்லும் வகையில் இவரது பிள்ளைகள் மூவரும் இசைத்துறைப் பட்டதாரிகளாகவுள்ளனர். சகோதரன், சகோதரி ஆகியோரும் இசைக் கலைஞராகவுள்ளனர். இவரது மகன் ம.தயாபரன் கலாவித்தகர் பட்டம் பெற்றவர். பல மேடைகளிலும், தொலைக்காட்சியிலும் பாடகராகவும் மற்றும் போட்டிகளிலும் வெற்றிபெற்று பிரபல்யம் அடைந்துள்ளார். இசைத்துறைக்கு இவரது முழுக்குடும்பமும் சேவையாற்றிவருவது பாராட்டுக்குரியது ஆகும்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.


06.12.1947

## கலைஞானச்சுடர்-2014

# திரு.தம்பிப்பிள்ளை பரராஜசிங்கம்

அரசடி வீதி, திருநெல்வேலி

**நாட்டுக்கூத்து (சிந்துநடை)**

சிந்து நடைக்கூத்தின் பாரம்பரியத்தில் வந்த திரு.த.பரராஜசிங்கம் அவர்கள் திரு நெல்வேலி, பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சிற்பா சாரியார் ஆவார். பொன்னப்பா அண்ணாவியாரிடம் சிந்துநடைக்கூத்தைப் பாரம்பரிய மாகக் கற்றுக்கொண்டார். காத்தவராயன், சிவன், பபூன் ஆகிய பாத்திரங்களில் நடித்துள்ளார். மேலும் உடுக்கு போன்ற வாத்தியங்கள் வாசிப்பதில் கைதேர்ந்தவர். நாட்டுக்கூத்திலே பிற்பாட்டு பாடுவதிலும் திறமையானவர். சிறந்த குரல்வளம் மிக்கவர். 1969 ஆம் ஆண்டு காரைநகர் கதிர்காமசாமி கோவிலில் மேடையேற்றப்பட்ட காத்தவராயன் கூத்தின் மூலமாக இவ ரது கலைப்பயணம் ஆரம்பமானது. ஏறக்குறைய 1000 மேடைகளில் இவரது கூத்துக்கள் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. 1970-1980 வரையான காலப்பகுதியில் பங்குனித் திங்கள் தினத்துக்கு இவரது காத்தவராயன்கூத்து அரங்கேற்றப்பட்டுவந்துள்ளது. மேலும் 1981-1994 வரை ஓமானில் வேலைசெய்த காலங்களில் அங்கும் ஒரு குழுவை உருவாக்கி காத்தவராயன் கூத்தினைப் பழக்கித் தானும் நடித்து எமது பாரம்பரியக்கலையினை வெளிநாட்டிலும் ஆற்றுகை செய்துள்ளார். 2008 ஆம் ஆண்டு ஜோன் டி சில்வா அரங்கில் நடைபெற்ற தேசிய தமிழ் நாடகவிழாவில் மேடையேறிய இவரது "கோடை நாடகம்" பலரது பாராட்டுக்களையும் பெற்றது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இவரது காத்தவராயன் கூத்து ஆற்றுகை செய்யப்பட்டு அவர்களால் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவைகள் இவரது ஆற்றலுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளன. சிற்பாச்சாரியாராகிய இவர் தேர்ச் சிற்பங்கள், வாகனங்கள் செய்வதிலும் திறமை மிக்கவர். தனது பிள்ளைகளையும் நாட்டுக்கூத்து, இசைத்துறை, நடனத் துறை ஆகியவற்றில் ஆற்றல் பெற்றவராக வளர்த்துள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.



28.04.1946

# கலைஞானச்சுடர்-2014

## திரு.கார்த்திகேசு தில்லையம்பலம்

33, கலைமகள் வீதி, அரியாலை

**இசை நாடகம்**

அரியாலையில் வசித்துவரும் இவர் ஓர் சிறந்த நாடகக்கலைஞர் ஆவார். கலைக்குடும்பத்தில் பிறந்தமையால் சிறு வயது தொடக்கம் கலையார்வம் மிக்கவராக விளங்கினார். பிரபல அண்ணாவியரான தனது தந்தையார் திரு.பரமு கார்த்திகேசு அவர்களிடம் கூத்துக்கலையைப் பயின்றார். மரபு வழி இசை நாடகம், நாட்டுக்கூத்து, சிந்துநடைக்கூத்து, மற்றும் வரலாற்று நாடகங்களில் நடித்துள்ளதோடு நெறியாள்கை செய்தும் உள்ளார். வில்லுப்பாட்டு, உடுக்கு வாத்தியம் இசைப்பதிலும் திறமையுடையவர்.

அரியாலையில் பத்மா நாடகக் கலாமன்றத்தை நிறுவிக் கலைப்பணியாற்றி வருகின்றார். கலாபூஷணம் வி.கே. இரத்தினம் அவர்களிடம் இசைநாடகப் பயிற்சியைப் பெற்றுள்ளார். வீரஅபிமன்யு, சங்கிலியன், அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, குப்பி விளக்கு போன்ற இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாடகங்களை இயக்கி நடித்துள்ளார்.

**பெற்ற விருதுகள்:** யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம், யாழ்ப்பாண மாநகர சபை, பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் போன்றவற்றினாரல் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார். 2014 ஆம் ஆண்டு அரச விருதாகிய "கலாபூஷண விருது" பெற்றுக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.

## கலைஞானச்சுடர்-2014

# சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்



01.03.1949

பொற்பதி வீதி, கொக்குவில்

**பண்பாட்டியல்**

குப்பிளான் கிராமத்தில் பிறந்து கொக்குவில் கிழக்கில் வாழ்ந்துவரும் சிவசுப்பிரமணியம் மகாலிங்கம் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்று, பின்பு கல்வி டிப்ளோமா பட்டத்தினையும், சைவ சித்தாந்தத் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். 20 வருடங்கள் ஆசிரியராகவும், 12 வருடங்கள் பலாலி ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளராகவும், 04 வருடங்கள் இந்து கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகவும் கடமைபுரிந்துள்ளார்.

இளமைக் காலத்திலிருந்தே ஆலயங்களில் சமயச் சொற்பொழிவாற்றியவர். ஈழத்தின் பலபாகங்களிலும், கனடா போன்ற வெளிநாடுகளிலும் சமயச் சொற்பொழிவாற்றிய இவர், 2003 ஆம் ஆண்டு பிரித்தானியச் சைவத்திருக்கோவில் ஒன்றியம் நடாத்திய சைவ மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இவரால் எழுதி வெளியிட்ட நூல்கள்: திருமுறைச் செல்வம், சிவஜோதி, முருக மந்திரம், ஞானதீபம், தரிசனங்களும் வாழ்வியலும், தவமுனிவனின் தமிழ் மந்திரம், சைவசித்தாந்த தத்துவமும் ஈழத்தவர்களின் பங்களிப்பும்.அத்துடன் கல்வி, சமயம் சார்ந்த கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.

செய்த பணிகள்: 1975 ல் எட்டியாந்தோட்டையில் இந்து மாமன்றத்தை ஆரம்பித்தது. இந்து சமயப் பேரவையின் ஸ்தாபக உப செயலாளராக, கீரிமலை சிவநெறிக் கழகத்தின் பிரசாரச் செயலராக, 1993 குப்பிளான் சைவ மகா சபையை நிறுவி அதன் ஸ்தாபக செயலராக பணியாற்றியவை குறிப்பிடத்தக்கன.

பெற்ற விருதுகள்: சிவத்தமிழ் வித்தகர் -1991, திருமந்திர வாரிதி -1993, திருமுறைச் சொல்வள்ளல்-1994, சிவநெறிக் கடல் -2003(கனடா), சைவத்தமிழ் அரசு 2003 (கனடா), திருவாசகச் செம்மல் 2014 ,அரச விருதாகிய "கலாபூஷணம்"-2011.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.



01.03.1950

## கலைஞானச்சுடர்-2014

# திரு.கந்தையா முருகேசம்பிள்ளை

நாராயணா வீதி, கோண்டாவில் கிழக்கு

**பாரம்பரியக் கலைகள்**

பாரம்பரியக் கலைகளின் பரம்பரையில் வந்த திரு.க.முருகேசம்பிள்ளை கோண்டாவில் கிழக்கில் வாழ்ந்து வருகின்றார். தந்தை,பேரன் ஆகியோரிடம் நாட்டுக் கூத்து, குதிரையாட்டம், காவடியாட்டம் ஆகியவற்றைப் பயின்று அவர்களுடன் சேர்ந்து பல மேடைகளிலும், ஆலயங்களிலும் ஆற்றுகை செய்துள்ளார். நல்லூர்க் கந்தன் ஆலயம், கோண்டாவில் வல்லிபுரநாதர் ஆலயம், காளி கோவில் போன்ற இடங்களில் வருடா வருடம் இந்நிகழ்வு இடம்பெறும். மேலும் பல நாட்டுக்கூத்துக்களையும் பழக்கி நடித்துள்ளார். நல்லூர்ப் பிரதேச செயலகம் நடாத்திய கலாசாரப் போட்டியில் "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகத்தில் சுமாலியாக நடித்தார். அந்நாடகம் இரண்டாம் இடத்தினைப் பெற்றது. கோண்டாவில் நாராயணா கலைக் கழகத்தினூடாக நாட்டுக்கூத்து, காவடியாட்டம், குதிரையாட்டம் என்பவற்றை வளர்த்து வருகின்றார்.

பெற்ற விருதுகள்: வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரம்பரியக் கலைகள் போட்டியில் கூத்து வழி நடனத்தில் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்று வட மாகாண பாரம்பரிய கலைகளுக்கான ஆளுநர் விருது-2014 ஐ பெற்றுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 - நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவித்தது.



03.04.1952

### கலைஞானச்சுடர்-2014

# திரு. பொன்னையா கணேசன்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு

03.04.1952

**தவில்**

கோண்டாவில் மேற்கில் நிரந்தரமாக வாழ்ந்துவரும் திரு.பொ.கணேசன் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கானமூர்த்தி குழுவில் தவில் கலைஞராக இருந்து தவில் வாசித்த இவர் பரம்பரை பரம்பரையாக இக்கலைத் தொழிலை மேற் கொண்டு வருகின்றார். தனது தந்தையாரிடம் தவில் கலையின் நுட்பங்களை கற்றுத் தேறியவர். தவில்-நாதஸ்வரம் என்னும் மங்கல இசையுடன் விழாக்களை ஆரம்பிப்பது தமிழர் பண்பாடாகும். அவ்வகையில் ஆலயத் திருவிழாக்கள், திருமணக் கொண்டாட்டங்கள், தமிழர் பண்டிகைகள், கலாசார விழாக்கள் எனப் பல இடங்களில் முப்பது வருடங்களாகத் தனது ஆற்றுகையை குழுவினருடன் இணைந்து செய்துளார். இலங்கைத் தீவில் மட்டுமல்லாது தமிழர் வாழும் வெளிநாடுகளிலும் சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

பெற்ற விருதுகள்: கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் "தவில்நாதமணி" -1994, சுவிஸ் சிவன் கோவில் "கலைஞான்சுடர்ஒளி"-1995, எம்.ஜி.ஆர். அவர்களின் 24 ஆம் ஆண்டு விழாவில் "தனநய வாருதி" விருது - 2011, சுழிபுரம் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், அவுஸ்திரேலியா மகாவிஷ்ணு ஆலயம், ஜேர்மனி தேவாலய இசை இறுவட்டு நிகழ்வு என்பவற்றில் இவரது திறைமைக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை, 2014 -நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.



# நன்றிக்குரியவர்கள்

நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவை 2000 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றது. பண்பாட்டு விழாக்களை நடாத்திக் கலைஞர்களைக் கௌரவிப்பது அதன் மரபாகும். அவ்வகையில் 2014 ஆம் ஆண்டு பண்பாட்டு விழாவில் பத்துக் கலைஞர்கள் கௌரவிக்கப்பெறுகின்றனர். அக்கலைஞர்கள் எமது பிரதேசத்தில் மட்டு மல்லாது, கடல்கடந்தும் எமது பண்பாட்டுக் கலைகளை வெளிப்படுத்தி வளர்த்து வருபவர்கள். இன்று உலகமயமாக்கல் எனும் நவீனத்துக்கு முன்பாக நவீன தொழில்நுட்ப வளர்ச்சியுடன் போட்டி போட்டு எமது பண்பாட்டு விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் அழியவிடாது பாதுகாத்து வரும் கலைஞர்களை நினைப்பதும், அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதும் பிரதேச செயலகத்தின் அத்தியாவசியமான செயற்பாடுகளில் ஒன்றாகவுள்ளது. நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை பண்பாட்டியல், பாரம்பரியக்கலை, சிற்பம், ஓவியம், நாட்டுக்கூத்து, நாடகம், கர்நாடக இசை, நடனம், சமயம், தவில் எனத் துறை சார்ந்த பத்துக் கலைஞர்களைப் பாராட்டி "கலைஞானசுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

கலைஞர்களுக்கு நன்றி கூறி வாழ்த்தும்- நிதிஅனுசரணை வழங்கி வழிகாட்டும் வடக்குமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் அதன் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர், நல்லூர்க் கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலரும், உதவிப் பிரதேச செயலர், இணைந்து செயற்படும் பேரவை நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பண்பாட்டு விழா-கலைஞர் கௌரவிப்புக்கு உதவிகள் வழங்கும் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், நல்லூர்ப் பிரதேச செயலக அலுவலர்கள் அனைவரும் நன்றிக்குரியவர்களாகின்றனர். கலைஞானச்சுடர் விருதினை வடிவமைத்துத் தந்த சுன்னாகம் பாலா தொழிலகத்தினர், நோபிள் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினர் ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

நூலாக்கம்:- ரஜனி குமாரசிங்கம்<br>
செயலாளர், கலாசார உத்தியோகத்தர்<br>
கலாசாரப் பேரவை<br>
பிரதேச செயலகம்.<br>
நல்லூர்

# நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை - நிர்வாக சபை 2014-2015



**இ.வ. இருப்பவர்கள்:** திருமதி வா. ரஜீந்திரன். திருமதி சுபாஜினி மதியழகன் (உதவி பிரதேச செயலர்). திரு. ஆசை இராசையா. திரு. பா. செந்தில்நந்தனன் (பிரதேச செயலர். தலைவர்). திரு. சோ. பத்மநாதன். திரு. நா. விமலநாதன். திருமதி சாந்தினி சிவனேசன். திருமதி. கு. ரஜனி (கலாசார உத்தியோகத்தர். செயலாளர்)

**நிற்பவர்கள்:** திரு எஸ். புத்திசிகாமணி. திரு கு. மகிழ்ச்சிகரன். திரு. வே. சிவகுமாரன். திரு.கே.ஶ்ரீதரன். திரு. ந. சர்வகுணசீலன்(பொருளாளர்) திரு.சி. துரைராஜா. திரு.கே.தவனேஸ். திரு.பு.தஜிதரன்.



அரியாலை கிழக்கு - கடற்கரை